


**12.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. ∴பிரான்ஸ் மார்ஷேலே நகரில், நம்நாட்டின் முதலாவது துணை தூதரகத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி, அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் இணைந்து இன்று திறந்து வைக்கவுள்ளார்.

2. ஆசிய மீன்வள மாநாட்டை, மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு.ராஜீவ்ரஞ்சன் புதுதில்லியில் இன்று துவக்கி வைத்தார்.

3. பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் தமிழகத்தில் மேற்கொள்ளப் படுவதாக வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை மத்திய அரசு விடுவிக்க பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கோரிக்கை விடுத்துள்ளார்.

5. அஹமதாபாத்தில் இங்கிலாந்திற்கு எதிரான 3-வது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

∴பிரான்ஸ் நாட்டின் வரலாற்று சிறப்பு வாய்ந்த மார்ஷேலே நகரில், பிரதமர் திரு. நரேந்திரமோடி, ∴பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் இணைந்து நம்நாட்டின் முதலாவது துணை தூதரகத்தை இன்று திறந்து வைக்கிறார்.

இந்த துணை தூதரகம், தெற்கு ∴பிரான்ஸ் பகுதியில் உள்ள இந்திய வம்சாவளியினருக்கான தூதரக சேவைகளை மேம்படுத்துவதோடு, இந்திய, மத்திய கிழக்கு ஐரோப்பிய பொருளாதார மண்டல வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நலன்களுக்கு பயன்படும் வகையில் அணு எரிசக்தியை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இந்தியா, ∴பிரான்ஸ் உள்ளிட்ட பன்னாட்டு

அமைப்பின் சார்பிலான சர்வதேச அணுமின் உலையையும் இருதலைவர்களும் பார்வையிடுகின்றனர்.

இந்த திட்டத்தில் 2005-ம் ஆண்டு இந்தியா பங்கேற்ற நிலையில் தூய்மையான எரிசக்தியை மேம்படுத்துவதற்கு இதுவழிவகை செய்கிறது.

இதனைத் தொடர்ந்து இருதலைவர்களும் முதல் மற்றும் 2-ம் உலகப்போரில் உயிரிழந்த வீரர்களின் நினைவிடத்தில அஞ்சலி செலுத்துகின்றனர்

இந்நிகழ்விற்கு பின்னர் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் அழைப்பிற்கு ஏற்ப பிரதமர் திரு. நரேந்திரமோடி ஃபிரான்சிலிருந்து, அமெரிக்கா புறப்பட்டு செல்கிறார்.

❖❖❖❖❖❖

பிரதமர் தொடர்ச்சி

இதனிடையே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்திய சிறப்பான முன்னேற்றம் கண்டுவருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

பாரீசில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக கூகுள் நிர்வாக இயக்குநர் சுந்தர் பிச்சையை சந்தித்த பின்னர் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஆக்கப்பூர்வமான பயன்களுக்காக செயற்கை தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதாகவும், இந்தியாவின் இளையோர் சக்தியின் மீது நம்பிக்கை வைத்து உலக நாடுகள் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளார்.

இதனிடையே பிரதமர் உடனான சந்திப்பு குறித்து தமது சமூக வலைதளப்பதிவில் மகிழ்ச்சி தெரிவித்துள்ள சுந்தர் பிச்சை பல்வேறு வாய்ப்புகள் குறித்து பிரதமருடன் விவாதித்ததாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இந்தியாவிற்கு பல வாய்ப்புகளை உருவாக்கும் என்று கூறியுள்ள அவர், மின்னணு பரிவர்த்தனையில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

அஸ்வினி வைஷ்ணவ்

இந்தியாவின் செமி கண்டக்டர் துறையில் அமெரிக்காவின் **Lam** ஆராய்ச்சி நிறுவனம் பத்தாயிரம் கோடி முதலீடு செய்யவுள்ளதாக மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கை இந்தியாவின் குறைகடத்தி பிரிவில் மேலும் ஒரு மைல்கல் என்று அவர் தமது சமூக வலைதளப்பதிவில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் செமிகண்டக்டர் தொலைநோக்கு பாதைக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

ராஜீவ் ரஞ்சன்

ஆசிய மீன்வளம், மீன்வளர்ப்பு கூட்டமைப்பின் 4-வது மாநாட்டை மத்திய மீன்வளம் கால்நடை பராமரிப்பு, பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் புதுதில்லியில் இன்று துவக்கிவைத்தார்.

டெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தில் நடைபெறும் இவ்விழாவில் மீன்வளத் துறையை முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்படுகிறது

அலங்கார மீன் வளர்ப்பு சந்தை வாய்ப்புகள், மீன் ஏற்றுமதி, மீன் பதப்படுத்துதல் தொழில்நுட்பங்கள், இதற்கான குளிர்சாதன வசதிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் கடல் மேம்பாட்டு பணிகளில், பசுமை இயக்கத்துடன் கூடிய கடல் மேம்பாட்டு பணிகள் என்ற கருப்பொருளுடன் இம்மாநாடு நடைபெறுகிறது.

14 நாடுகளை சேர்ந்த மீன்வளத்துறையின் 900 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖

பரிக்ஷா பே சர்ச்சா

மாணாக்கர் தங்களது வலிமையை உணர்ந்து, எவ்வித அச்சமும் இல்லாமல் தங்களது பலவீனங்களை களைவதன் அவசியத்தை மனநல ஆலோசகரும், திரைப்பட நடிகையுமான தீபிகா படுகோனே வலியுறுத்தியுள்ளார்.

பரிச்ஷா பே சர்ச்சாவின் இரண்டாவது பகுதியாக மாணாக்கரிடையே இன்று கலந்துரையாடிய அவர், தெளிந்த மனதுடன் மாணாக்கர் மனஅழுத்த சவால்களை எதிர்கோள்ள அறிவுறுத்தினார்

தேர்வு மன அழுத்தத்தை களையும் வகையில் பிரதமர், மாணாக்கரிடையே உரையாற்றியதை அவர் வரவேற்றார்

இதனிடையே பரிக்ஷா பே சர்ச்சாவில், மாணாக்கருடன் பிரதமரும், மனநல ஆலோசகரும் கலந்துரையாடியது பயனளிப்பதாக அமைந்தது என்று திருச்சி கிரியா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியரும், பள்ளி மாணவியும் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

ஆளுநர்

காசி தமிழ் சங்கமத்தின் 3-வது கட்டமாக ஒரே பாரதம் ! உன்னத பாரதம் ! இயக்கத்தின் கீழ் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி நாளை காசிக்கு செல்லும் ரயிலை சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து கொடியசைத்து வழியனுப்பி வைக்கிறார்.

இந்த ரயிலில் ஏராளமான மாணாக்கர், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலாச்சார கலை வல்லுநர்கள் பங்கேற்கின்றனர்.

சென்னை இந்திய தொழில்நுட்ப கல்விக்கழகம் இதற்கான விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.

❖❖❖❖❖❖

<u>அன்பில் மகேஷ்</u>

தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை மத்திய அரசு விடுவிக்க வேண்டும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று பேசியஅவர், மாணாக்கரின் நலனை கருத்தில் கொண்டு மத்திய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

ஒருங்கிணைந்த பள்ளி கல்வி திட்டத்தில் 2023-24ம் ஆண்டிற்கான 4-ம் தவணையை அரசு இதுவரை வழங்கவில்லை என்றும்,

2024-25-ம் நிதியாண்டிற்கான 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் நிதியை இதுவரை விடுவிக்காமல் காலம் தாழ்த்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

<u>சேகர்பாபு</u>

சென்னை காசிமேடு, புதுமனை குப்பம், சிங்காரவேலன் நகரில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய குடியிருப்புகள் அமைப்பது குறித்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும தலைவர் திரு.சேகர்பாபு இன்று களஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இந்த ஆய்வின் அடிப்படையில் புதிய குடியிருப்புகள் கட்ட முதலமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்படும் என்றார்.

வடசென்னை பகுதியில் ரத்த சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணிகள் வரும் ஜுன் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் குறிப்பிட்டார்.

வடசென்னை வளர்ச்சித்திட்டத்திற்கான முன்னெடுப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் திரு. சேகர்பாபு தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

<u>முத்துசாமி</u>

தமிழகத்தில் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வு காணுமாறு முதலமைச்சர் உத்தரவிட்டிருப்பதாக மாநில வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் வீட்டுவசதி வாரியத்தின் திட்டங்கள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

தேசிய மாணவர் படையை சேர்ந்த மாணவர்கள் நாகை மாவட்டம் கோடியக்கரை வன உயிரின சரணாலயத்தில் கல்வி பட்டறிவு பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதனொரு பகுதியாக கடல்பகுதியில் உள்ள குப்பைகளை சேகரித்து கடல்மாசுவை தடுப்பதற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

கோவை வாய்ஸ்

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் 7-வது மலர்கண்காட்சியை இன்றுடன் நிறைவடைகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

சேலம் வாய்ஸ்

சேலம் மாவட்டம் சங்ககிரியில் கிராம மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான தானியங்கி இயந்திரம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

திருவாரூர் வாய்ஸ்

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளின் நிலங்களுக்கு சிறப்பு குறியீட்டு எண் வழங்கப்படும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

கோவில்

தர்மபுரி குமாரசாமி பேட்டையில் உள்ள அருள்மிகு சிவ சுப்ரமணிய திருக்கோவிலில் தைபூச தேர்த்திருவிழாவில் பெண்கள் மட்டுமே வடம் பிடிக்கும் தேர்த்திருவிழா இன்று நடைபெற்றது.

இதில் ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் தை மாத பவுர்ணமி கிரிவலத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் மேற்கொண்டு வருகின்றனர்.

❖❖❖❖❖❖

<u>பேட்மிட்டன்</u>

சீன கிங்டொவில் நடைபெறும் ஆசிய கலப்பு அணி பேட்மிட்டன் சாம்பியன்பட்ட போட்டிகளின் தொடக்க ஆட்டத்தில் இந்தியா மக்காவ் அணியை 5-0 என்ற கணக்கில் வென்றது.

தொடக்க ஆட்டத்தின் கலப்பு இரட்டையர் பிரிவில், சதீஷ் குமார் கருணாகரன், ஆதியா இணை

மகளிர் இரட்டையர் பிரிவில், ட்ரீஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை

ஆடவர் இரட்டையர் பிரிவில் அர்ஜுன், சிராக்ஷெட்டி இணை, சீன இணைகளை தோற்கடித்தனர்.

அதேபோல் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா சென், மாள்விகா பன்சோத்தும் வெற்றிபெற்றனர்.

இந்த வெற்றியை தொடர்ந்து இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்திய கலப்பு அணி - கொரிய இணையுடன் அடுத்து மோதவுள்ளது.

❖❖❖❖❖❖

<u>டென்னிஸ்</u>

டெல்லி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், கரண்சிங் இணை - ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் **Siddhant Banthia, Parikshit Somani** இணை - இங்கிலாந்தின் **Jay Clarke,** டென்மார்க்கின் **Johannes Ingildsen** இணையுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

அஹமதாபாத்தில் இங்கிலாந்திற்கு எதிரான 3-வது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா சற்றுமுன் 5 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 21 ரன் எடுத்திருந்தது.

ரோஹித் ஷர்மா ஒரு ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

முன்னதாக டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

❖❖❖❖❖❖